**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**C.C. No. 72/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW 12 | | Examined as : | PW 8 |
| Name | : சிவதாஸ் | Defence | : |
| Father Name | : ராஜகோபால் | Court | : |
| Village | : காவல்ஆய்வாளர்,<br>பெரம்பூர் காவல் நிலையம் | Taluk | : |
| Calling | : | | : |
| Age | : 63/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day. 04.07.2026

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

எதிரி ஆஜர். குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் காவல்துறையில் ஆய்வாளராக இருந்து பணி ஓய்வுபெற்று மேற்படி கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். கடந்த 19.12.2020 ஆம் தேதி பெரம்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் அவர்களால் சுந்தராம்பாள் க/பெ சேகர் என்பவரிடமிருந்து பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை மேல்விசாரணை செய்யும் பொருட்டு ஆய்வாளர் விசித்திராமேரி அவர்கள் எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் இளையராஜா, கண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த **பார்வை மகசர் அ.சா.ஆ.6 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

2. பட்டியல் சாட்சிகளான சாராதாம்மாள், சரத்குமார், சேகர், லெனின் பாபு, மகசர் சாட்சிகள் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்னர் இவ்வழக்கை மேல்விசாரணை செய்யும் பொருட்டு நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு எதிரியை தேடிவந்தநிலையில் கடந்த 25.06.2021 அன்று வாகன சோதனையில் நல்லடை முக்கூட்டு அருகே ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது எங்களை பார்த்ததும் பயந்து அரசமரம் பக்கம் மறைந்த ஆஜர் எதிரியை பிடித்து விசாரித்த போது முன்னுக்குப்பின் முரணாக பேசிய நிலையில் இனி தப்பிக்க முடியாது என தெரிந்து ஆஜர் எதிரி தானாக முன்வந்து சாட்சிகள் ராஜ்குமார், முனுசாமி ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அசாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரியிடமிருந்து மேற்படி அதே சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார்செய்து சுமார் 15 கிராம் எடையுள்ள உருக்கிய நிலையில் தங்ககட்டியை கைப்பற்றினேன். **அந்த கைப்பற்றுதல் மகசர் அசாஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே கைப்பற்றுதல் மகசர் மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் எதிரியை குற்ற காரணம் கூறி கைதுசெய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட தங்கக்கட்டியை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **அந்த படிவம் 91 அசாஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்கக்கட்டி தான் நான் எதிரியிடமிருந்து கைப்பற்றிய தங்கக்கட்டி ஆகும். **அந்த புகைப்படம் அசாஆ 11 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. மேற்படி தங்கக்கட்டியை அசா1 சுந்தராம்மாள் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து இடைக்கால வசமாக பெற்றுக்கொண்டுவிட்டார். பின்னர் வழக்கின் எதிரி மீதான விசாரணையை முடித்து 18.10.2021 இதச பிரிவு 392 ன் கீழ் இறுதி

அறிக்கையை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>**

இந்த வழக்கில் யார் புகார் கொடுத்தது என்றால் சுந்தராம்பாள் புகார் கொடுத்தார். சுந்தராம்பாள் தான் நேரடியாக வந்து கைப்பட புகார்மனு எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் வைத்து எதிரியை கைது செய்யவில்லையென்றாலும் அன்றைய தினத்தில் நான் அங்கு வாகன சோதனைக்கு செல்லவில்லையென்றாலும் சரியல்ல. இந்த வழக்கை நான் எப்போது மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் ஏப்ரல் மாதம் 2021ஆம் ஆண்டு பெரம்பூர் காவல் நிலைய ஆய்வாளராக பொறுப்பு எடுத்துக்கொண்டேன். அந்த சமயத்திலேயே நான் இந்த வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். இந்த வழக்கின் பட்டியல் 8, 9 சாட்சிகளை எங்கு வைத்து எப்போது விசாரித்தேன் என்றால் 25.06.2021 அன்று சம்பவ இடத்திற்கு வைத்து விசாரித்தேன். நான் சொன்ன நாள் நேரத்தில் வைத்து எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலமும் எதுவும் பெறப்படவில்லையென்றாலும், எந்தவித தடயப்பொருளும் கைப்பற்றப்படவில்லையென்றாலும் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை வழக்கிற்கு ஏற்றாற்போல் நானே தயார்செய்து பின்னிட்டு எதிரியிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எவ்வித தடயப்பொருளும் கைப்பற்றப்படவில்லையென்றாலும், வேறு வழக்கில் கைப்பற்றிய தடயப்பொருளை எதிரியிடமிருந்து கைப்பற்றியதாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி விசித்ராமேரி சம்பவ இடத்திற்கே செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் அசா 1 கொடுத்த பொய்ப்புகாருக்கு ஏற்றாற்போல் பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் அசாஆ 1 புகார் மனுவில் எதிரியின் அங்க அடையாளம் குறித்து குறிப்பிட்டு எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் அடையாள அணிவகுப்பு நடத்தப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சாலை செம்பனார்கோவிலிருந்து பெரம்பூர் செல்லும் பிரதான சாலை என்றாலும் போக்குவரத்து அதிகம் இருக்கக்கூடிய சாலை என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே உள்ள பாலிடெக்னிக் கல்லூரி

நுழைவுவாயிலில் உள்ள CCTV camera பதிவுகள் ஏதேனும் கைப்பற்றப்பட்டதா என்றால் சம்பவ சமயத்தில் அங்கு CCTV camera இல்லை. அவ்வாறு சொன்னால் தவறு என்றாலும் அங்கு கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக உள்ளது என்றாலும் சரியல்ல. மேற்படி கல்லூரியில் நுழைவுவாயில் காவலாளியை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளாரா என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி மீது ஜோடிக்கப்பட்ட குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.